


174
T4508

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



13

1977—ஜூலை

# அரைய நாட்டார் பட்டயம்

தேனோலை

பதின்மூன்றும் இதழ் — ஜூலை 1977

பதிப்பாசிரியர்

கொடுமுடி சண்முகப் பிரகதம்

பதிப்பாளர்

© ச. பிரகதம்,
54 A, வேலூர்ச் சாலை
திருச்செங்கோடு-637211

விலை ரூ. 1-00

ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

எழுத்துச் சீர்மை:

1. உகர ஊகார உயிர்மெய்க்குப் பக்கக்குறி இடுதல் ஜுரம், ஜூலை, முறம், மூளை.
2. உயிர் நெடில்களுக்குக் கால் வாங்குதல்.

---

சொல்லடி சிவசக்தி எனைச் சுடர்மிகும்
அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலத்தை ஆள்வதற்கே.

---

அச்சிட்டோர்:

நாரா நாச்சியப்பன்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-600014.

# அரைய நாட்டார் பட்டயம்

## 1. அறிமுகம்

கொங்கு நாடு 24 பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் காவிரி ஆற்றின் இருகரையிலும் பகிர்ந்து, மேல்கரை அரைய நாடு, கீழ்கரை அரைய நாடு என அமைந்தது அரைய நாடு. கீழ்கரை அரைய நாட்டைச் சேர்ந்த கொடுமுடியில் பிறந்த இரண்டு அனாதைச் சிறுவர்கள், திருமணக்காணியாக மேல்கரை அரைய நாட்டைச் சேர்ந்த திருச்செங்கோட்டைச் சுற்றியுள்ள ஏழுகிராமத்தின் உரிமை பெற்ற வரலாற்றைக் கூறுகிறது இப் பட்டயம். எனவே அரையநாட்டார் பட்டயம் எனப் பெயரிடப் படுகின்றது.

## 2. இடம்

கொங்கு குலாலரிடையே நடை பெற்ற ஒரு வழக்கில் இப் பட்டயம் சான்று தரும் ஒரு ஆவணமாகச் சேலம் சார்நிலை நீதி மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது திருச்செங் கோடு மண்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. சண்முகம் அவர்கள் வசம் உள்ளது.

## 3. காலம்

இப்பட்டயம் கிபி *1401* ஆம் ஆண்டு நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சி ஒன்றின் எழுத்து வடிவம் ஆகும்.

## 4. செய்தி

13, *14* ம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டுச் சமுதாயம் எவ்வாறு இருந்ததென்றறிய இப்பட்டயம் ஒரு முதன்மையான கருவி ஆகும்.

திருப்பாண்டிக் கொடுமுடியில் பிறந்து திருச் செங்கோட்டில் இறைபணி புரிந்த உமையாயி என்ற தாசிப் பெண்ணின் மனிதாபிமானம் இதனால் விளங்குகின்றது.

தனது பிறந்த ஊரான கொடுமுடியில் குயவர் குடியைச் சேர்ந்த பொங்காளியப்பன்—பெருங்காளியம்மாள் என்ற தம்பதியரும், அவரோடு சேர்ந்தவர்களும் அடுத்தடுத்துக் காலமாகி விட்டதால், அவர்களின் இரு புதல்வர்களான வேலப்பன். மலையப்பன் என்ற இரு சிறுவர்கள் அனாதை ஆகிவிட்டனர். அவர்களை உமையாயி எடுத்து வளர்த்துக் கல்வியும் நல்லறிவும் புகட்டுகிறாள். அத்துடன் அவர்களது குலத் தொழிலான மண் பாண்டங்கள் வனைதல், கோயில்களுக்கு உருவங்கள், குதிரைகள் செய்வதில் பயிற்சி பெறவும் ஏற்பாடு செய்கின்றாள். அவர்கள் காளைப்பருவம் பெற்றதும் திருமணத்திற்கும் ஏற்பாடு செய்கிறாள்.

திருச் செங்கோட்டிற்கு அருகில் உள்ள மேரூர், எழுகரை நாட்டின் தலைநகரம் ஆகும். அங்கு வாழ்ந்த மயில் கவுண்டர் அவர்களின் காதல்கிழத்தியாக உமையாயி இருந்தாள். உமையாயியின் வேண்டுகோளை ஏற்று, இந்த அனாதைச் சிறுவர்கள் திருமணத்தை நடத்த ஆவன செய்கிறார்.

ஈரோட்டில் வாழ்ந்த, குலாலர்களில் பூந்துறை நாட்டைச் சேர்ந்த காளியண்ணன், செட்டியண்ணன், பெரியண்ணன் ஆகியோரை வரவழைத்துப் பெண் கேட்கின்றார். அவர்கள் வீட்டில், பருவமெய்திய நிலையில் வெள்ளை பூத்த காளியக்காள் என்ற பெண் செல்வழியில்லாமல் நின்றது. அப்பெண்ணை மணம் பேசி அனைவரும் ஒப்புக் கொண்டபடி வேலப்பனுக்கும் காளியக்காளுக்கும், திருச்செங்கோடு நகரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணமான வேலப்பன், தனது தம்பி மலையப்பனோடும் மனையாள் காளியக்காளோடும், பிழைப்பதற்கு வழியாக ஏழு கிராமங்களின் கொசப்பாடு பெறுகின்றனர்.

## 5. சிறப்பு

கொங்கு நாட்டுச் சமுதாயத்தில் சில கூறுகளை இதில் அறிகின்றோம். கோயில் சேவகம் செய்கின்ற உமையாயி என்ற பெண் தனது காதல் கொழுநர் மேரூர் மயில் கவுண்டர் அவர்களின்

செல்வாக்கைப் பயன்படுத்தி தான் வளர்த்த அனாதைச் சிறுவர்களுக்கு அவர்களின் குடியிலேயே பெண் எடுத்து குடியும், குடித்தனமுமாக அமர்த்துகிறார். அந்தச் சிறுவர்களின் வழித்தோன்றல்கள் அந்தச் செங்கோட்டு வேலவனின் அருளால் சீரோடும், சிறப்போடும் பல்கிப் பெருகியுள்ளனர்.

## 6. கொங்கு குலாலர்

மண் ஏனங்கள் செய்து வாழும் தொழிலாளர்கள் குயவர்கள் எனப்படுவர். குயவர்கள் என்பதன் மறுபெயரே குலாலர் ஆகும். இவர்களின் வரலாறு கூறுபவையாகத் தேனோலை இதழில் மதுக்கரைப்பட்டயம், *24* நாட்டுப்பட்டயம், சென்மப்புலவன்பட்டயம், ஆகியவை ஏற்கனவே வெளிவந்துள்ளன.

பெரிய புராணத்தில், தில்லைவாழ் அந்தணர்என்ற தொகைப் பெயருக்கு அடுத்துத் தனிப்பெயராகக் கூறப்படும் முதல் அடியார் திரு நீலகண்டர் இவர்களின் குலமுதல்வர் ஆவர். சங்ககாலப் புலவர் கோவூர் கிழார் 'நன்மதி வேட்கோச்சிறார்'' என இக் குல இளவல்களைக் கூறிமகிழ்கின்றார். [1] ''கலம் செய்கோ'' என்று பல இடங்களில் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இராசராச சோழனின் பட்டயங்களில் சோழநாட்டின் பல ஊர்களுக்கு இம்மரபினர் கர்ணம் (கணக்குப்பிள்ளை) ஆகப் பணியாற்றிய செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

[2] தொன்றுதொட்டு அறிவு மேம்பாடுடைய குடிகளாக இருந்துள்ளமையைத் தமிழ் இலக்கியமும். வரலாறும் அறிந்தார் உணர்வர்.

தற்காலம் இவர்களின் சமுதாயச் செய்தி மடலாக ''இளங்கோ'' என்ற திங்களிதழ் சென்னையிலிருந்து நடைபெற்று வருகின்றது.

## 7, படித்தவர்

நீதி மன்றத்தில் சாட்சிப் பொருளாக வைத்தல் வேண்டி, இப்பட்டயத்தைப் படித்துப் பிரதி செய்து, சிறுவிளக்கமும்,

---

1 கரிகாற் சோழனைப் பாடிய பெண்பாற் புலவர் வெண்ணிக் குதியார் இம்மரபினரே.

2 கோபுரச் சிற்ப வேலையில் புகழ் மிகு சிற்பிகள் பலர் உளர்.

எழுதியவர் திருச்செங்கோடு மகாதேவ வித்தியாலயம் உயர் நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் திரு நாராயணசாமி அவர்கள் ஆவார். அவரது பணியினைப் பாராட்டும் பொருட்டு, அவர் எழுதி யளித்த வாக்கிலேயே இப்பட்டயம் பதிப்பிக்கப்படுகிறது.

## 8. இறுதியில்

பட்டயத்தை நேரில் கண்டு மேலாய்வு செய்ய் விழைவோர் தேனோலை ஆசிரியரை அணுகலாம். ஒரு தொடர்கதை எழுது வதற் கேற்ற கதைக்கரு கொண்ட உண்மை நிகழ்ச்சி இப் பட்டயம் எனில் மிகையாகாது.

# அரைய நாட்டுப் பட்டயம்

## முதல் ஏடு

ஹரி ஓம் நன்றாக, குருவாழ்க, குருவே துணை.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன் னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீரு சிறக்கவே

அருள் கிருபையால் ஆதிநந்திகேசன் அனுக்கிரகித்து திருவாய் மலர்ந்தருளின படிக்கு [1] கிரேதா, திரேதா, துவாபர, கலியுக, கிரோத யுகத்தில் பிரம்ம அர்ச்சனை பண்ணுகையில் பிரம்ம கிரியும், பிரம்ம தீர்த்தமும், பிரம்ம ஈசரும், திரேதா யுகத்தில் விஷ்ணு அர்ச்சனை பண்ணுகையில் விஷ்ணு கிரியும், விஷ்ணு தீர்த்தமும், விஷ்ணு ஈசரும், துவாபர யுகத்தில் துர்க்கா அர்ச்சனை பண்ணுகையில் துர்க்கா கிரியும், துர்க்கா தீர்த்தமும், துர்க்கா ஈசரும், கலியுகத்தில் நாக அர்ச்சனை பண்ணுகையில், நாக கிரியும், நாக தீர்த்தமும், நாக ஈசரும் [ஆக] இப்படி அநேக சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவதேவன், [2] தேவ சிகாமணி, தேவாதி தேவ சொருபமான பக்திப் பிரியன், பக்தவச்சலன் பார்வதி வல்லவன், பார்வதி பிராண நாயகன், முத்திக்கு வித்து முக்கண் ஈஸ்வரன், அழகிய நிர்மலன் பஞ்சவர்ணப் பிரகாசன். திருமுகப் பொலிவும், தெண்டாயுத அடித்தண்டும், [உடையவர்] சம்புத் தீவின், திராவிட தேசத்தின், தொண்டை மண்டலத்தில் காஞ்சி மா நகரில் திருக்கமலாலயத்தில் அர்த்த பாகம் பெற வேண்டி அருந்தபசு பண்ணுகையில் காட்சி கொடுத்தருளிய கொங்கு மண்டலத்தில்

---

1. நான்கு யுகங்களில் ஒன்றான கிரேதா யுகத்தில் எனக் கொள்க.
2. சிவனார் பெருமைகள்

## இரண்டாவது ஏடு

தட்சிண கைலாசம் என்கின்ற ஸ்ரீ நாகபருவதத்தில் அர்த்த நாரி ஈசுபரருடைய தம்பிரான், அவருடைய ஸ்ரீமந் குமாரராகிய விப்பிரப்பிரியன், [3] விசுவமூர்த்தி, சிவபாலன், சரவண பவன், குக்குடத் துவசன், குங்கும வண்ணன், கௌரி திருமகன், கணபதி சகோதரன், சாலோக ரட்சகன், தேவர் சிறைமீட்ட தேவசேனாதிபதி, பத்தரைப் பாராட்டர்க்காக, பட்டிஇடபத்தைக் காக்க, வீரு கொக்கரித்து மாக்களித்த குக்குடத் துவசத்தில் சத்தி வட்டம் ஒட்டி இரட்டித் தவிசர் காவடிக்கும் பிரதாப துங்கன், வள்ளி தெய்வயானை மனோகரன் சிருஷ்டிக்கும் பிருமாவான [வரின்] அச்சரசுருதியில் திண்டாட குட்டைக் குடுமியை நெட்டை வாங்கும் கொண்டிராய துட்டச் சமணரை கழுமிசை வைத்த சுப்ரமணிய சுவாமியார் திருவுளப்படிக்கு[4]

சுபஸ்ரீமந் மகாமண்டலேசர் ஆன ஆரிய கண்டன் மூவாரிய கண்டன் முதலாரிய கண்டன் மேதினி மீசூரிய கண்டன் சமர்கொல் காலன் வீரக்குஞ்சுகன் மேதினி காவலன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் ஒரு குடைக்கீழ் உலக முழுதாண்ட இராசாதிராச பரமேசுரன் இராச மார்த்தாண்டன் இராச புங்கவன் இராச நாராயணன் இராச கேசரி அசுபதிகெசபதி நரபதி நவகோடி நாராயணன் பூர்வ தச்சின பச்சிம உத்திர சத்தசமுத்திராதிபதி எம்மண்டலமும் திரை கொண்டருளிய இராச பிரதாபனுர் இராசர்கள் தம்பிரான் துளசிகா தல விபாடன் துலுக்கர் மோகாந்த வித்தன் ஒட்டியர் தலவிபாடன் ஒட்டியர் மோகாந்த வித்தன் ஈழமும் இலங்கையும் யாட்பானமும் வங்காள தேசமும் கொண்டருளிய தொண்டை மண்டலம் சோழ மண்டலம் பாண்டி மண்டலம் கொங்கு மண்டலப் பிரதிஷ்டா சாரியான களத் தெவரெடுக்து போர் கலங்கும் இராய கண்டன் இரந்தோம் என நடந்தவர்க்கு இல்லை என்பது

## மூன்றுவது ஏடு

அறியாகண்டன் எண்திசா முகமும் பார்க்கும் இந்திர சுதானன் உபகடராய மகுடவிராயன் அஷ்ட திக்கும் மனோபயங்கரன் அஷ்டலட்சுமி பொருந்திய மாராயன் கோட்டத்து மன்னிய

---

3. செங்கோட்டு வேலவர் பெருமைகள்

4. இதுவரை ஈசன், முருகன் பெருமைகள் கூறப்பட்டன. இனி வருபவை அரசன் பெருமைகள்,

கண்டன் நாறினமாலைபாடிய சங்கீதசகித்திய நித்திய வினோதன் கெடி மன்னிய சுதானன் பூலோக தேவேந்திரன் இரணமுக சுத்த வீரன் சொல்தப்பா ஆரிய கண்டன் புண்டரீக புருஷோத்தமன் சகல சம்ரட்சலட்சுமி சீனிவாச பூலோக நாயகன் பூமண்டலத் தீசன் சண்டப் பிரசண்டன் கண்டர்க்கு ஒரு கண்டன் சத்ருக்கள் மனவரசன் சமையகம்பீரன் சமைய நாராயணன் சமைய துரோகா கண்டன் அஷ்டாசே பிரிய சம்பன்னன் சத்தியத்துக்கு அரிச்சத்திரன் அறிவுக்கு அகத்தீசுரன் பொறுமைக்கு தருமன் மல்லுக்கு வீமன் வில்லுக்கு விசையன் பரிக்கு நகுலன் ஞானத்துக்கு சகாதேவன் கரிமேல் உதையன் கொடைக்கு கர்ணன் படைக்கு இராமன் கோபத்துக்குகல்ாக்னி குளிர்ச்சிக்கு சந்திரன் அழகுக்கு மன்மதன் உக்கிரத்துக் நற்சிங்கம் தேசத்துக்கு மார்த்தாண்டன் அபிமானத்துக்கு அத்திரி ஆண்மைக்கு கார்த்திகேயன் ஆயுசுக்கு பிரமன் சிங்காரத்துக்கு திருமால் போகத்துக்கு இந்துரன பிரதிக்கினைக்கு பரசுராமன் பிரபைக்கு சூரியன் ஆசாரத்துக்கு வதிட்டன் குலத்துக்கு விக்கிரமாதித்தன் தைரியத்துக்கு சகூர்த்தி கம்பீரத்துக்கு சுமந்திரன் சங்கீதத்துக்கு தும்புரு சாத்திரத்துக்கு வான்மீகி காரியத்துத்க்கு அனுமான் பிரதாபத்துக்கு தச கண்டன் பிரதானிக்கு

நான்காவது ஏடு

சுகியிகுரதன் நீதிக்கு சாணக்கியன் காவியத்துக்குக் காளி தாசன் உசிதத்துக்கு போசராசன் பிறசகடகுக்ஷேன யுக்திக்கு விசுவாமித்திரன் சாந்திக்கு குமரன் சௌந்தரியத்துக்கு வள்ளேந்திரர் சுத்திக்கு பாகவர் புத்திக்கு விபூஷணர் மதிக்கு சரசுவதி சதிக்கு பாஞ்சாலி சிங்காரத்துக்கு நலகோபன் பிரதாபத் வக்கு இலட்சுமணன் உத்திரத்துக்கு குரு புத்திர தீரத்துக்கு இராசத்துவாரகிரிபாலர் பருவதப் பிரவேசர் சப்த சயத்ரத்துக்கு குலதீபகர் இத்தனைக்கும் வல்லவராய் சத்தசாகரமும் ஒரு குடைக் கீழ் ஆண்டு ஒரு நீயாய் சட்ட அரசாளும் விருப்பாட்சிராயர் வீர்ய சந்தராயர் போசர வீர நரசிங்க தேவ மகாராயர் தன்மராயர் பூபதிராயர் அகலங்க தேவ மகாராயர் தெய்வராயர் செகபதிராயர் கஜதூபராயர் கம்பாராயர் பிரபு தேவ மகாராயர் வல்லாளராயர் சம்மட்டி ராயர் கொடுபுலி தேவ மகாராயர்.

உச்சமல்லி தேவமகாராயர் விசையராயர் வல்லபராயர் பவநந்தி தேவ மகாராயர் சதாசிவ மகாராயர் சொக்கநாத நாயக்க மகாராயர் கிருஷ்ணதேவ மகாராயர் புசபல தேவ மகாராயர்

சீரங்க ராயர் மல்லிகார்ச்சுன ராயர் வேங்கடபதி ராயா இராமதேவ மகாராயர் வீரவிக்கிரம தேவ

## ஐந்தாவது ஏடு

மகாராயர் பிரிதிவி ராச்சிய பாரம் பண்ணி அருளாநின்ற வீரலட்சுமி விச்யலட்சுமி(யின்) விசுவாச வீரப்ப நாயக்கர் அச்சு தப்ப நாயக்கர் முத்து வீரப்ப நாயக்கர் திருமலை நாயக்கர் ஆன வர்களின் நாளில் கலியுக சகாத்தம் சதுராயிங (4513)க்கு செல்லா நின்ற ஆனந்த வருஷம் வைகாசி மாதம் உயிரு (25) தேதி சுக்கிர வாரம் விசாக நட்சத்திரமும் சஷ்டி திதியும் பெற்ற சுபதினத்தில் ஊத்தலூர் பட்டக்காரரும் தாராபுரம் பட்டக்கரரரும் ஈரோட்டு பட்டக்காரரும் ஆக மூன்று பட்டமும் மேல்கரை உயிச (24) நாடும் கீழ்கரை எழுகரை நாடும் வந்துகூடி தட்சிண கைலாசமாகிய நாககிரி சூழ்ந்த திருச்செங்கோட்டுத் தலத்தில் வாசமாய் எழுந்தருளிய பரிமளவல்லி ஆதி கைலாசநாத சுவாமி சன்னதி முன்பாக அர்த்தநாரீசர் கிருபையால் கொங்களாயி அம்மன் கிருபையால் கடாக்ஷம் பெற ஈரோட்டில் இருக்கும் திரு நீலகண்ட பக்தர் காளியண்ணன் செட்டியண்ணன் பெரியண்ணன் ஆகிய நாங்கள் மூன்று பேரும் அறைய நாட்டு கொடுமுடி ஊரிலிருந்து திருச்செங்கோட்டிற்கு வந்த திருநீலகண்ட பக்தராகிய வேலப்பன் மலையப்பன் காளியக்காள் மூன்று பேருக்கும் திருமண காணியாக ஊர்காணிக்கும் கிராம காணிக்கும் தர்ம சாதன பட்டயம் கொடுத்த படி பட்டயத்து விபரமாவது நாடும் பட்டமும் நம் உறவின் முறை ஆனவரும் கூடிய உறவின் முறை தெய்வச் சபையில் இராசர்கள் அரண்மனையார் அதிகாரிகள் மேல்படி தா(லுகா) குருக்கள் மார்கள் செட்டி வர்த்தகர் பலபட்டரையார் அனைவரும்

## ஆறாவது ஏடு

அறிய திருநீலகண்ட சுவாமிகள் திருவுளபடிக்கு கொடுமுடி மகுடலிங்க சன்னதியிலிருந்து வந்த திருவம்பலத்தடி தேவரடி யாள் உமையாயிக்கு திருச்செங்கோட்டில் கோவில் சேவகமாகி சுவாமிக்கு நாட்டியம் புரிந்து கொண்டு குடியிருக்கும் போது தன் சொந்த ஊரான கொடுமுடிக்குபோகவர இருக்க அந்தலூர் திரு நீலகண்ட பக்தர் பொன் காளியண்ணன் தாயார் பெருங்காளியம் மாள் இவர்கள் மக்களாகிய வேலப்பன் மலையப்பன் இவர்கள் இரண்டுபேர் மாத்திரம் இருக்க மற்ற தாயார் தகப்பனார் அண் ணன் தம்பி வளவுச்சனங்கள் அனைவரும் இறந்துபோய் ஒருவர்

ஆதரவும் இல்லாது இருப்பதனுல் அதை இந்த உமையாயி கண்டு தன் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்த வீட்டுச் சனமான படியினாலே அழைத்துக் கொண்டு திருச்செங்கோட்டிற்கு கூட்டி வந்து அந்த பையன்கள் இரண்டு பேரையும் வளர்த்து பள்ளிக் கூடத்தில் வைத்து படிப்பித்து விவேகசாலி ஆக்கியதற்கும் பிற் பாடு உங்கள் சாதித்தொழில் வரவேண்டுமே அதற்கு உங்கள் [சாதித் தொழில்] உயுக்தியினுலே நம்முடைய வீட்டில் இருக்கிற பானை சட்டி குடம் குருது ஆகியவைகளைப் பார்த்தும் கோவில் வேலை குதிரைகள் முதலாகியதும் பார்த்து பண்ணச் சொல்லி அப்படியே அந்த சேவைகள் எல்லாம் செய்து பழகிக் கொண்டு பதினெட்டு வயது வாலைக் குமாரராயிருக்க கலியாணம் பண்ண வேண்டும் என்று நியமிக்கும்போது அந்த உமையாயியை வைப்பாக வைத்திருக்கப்பட்ட மோரூர் நாட்டுக் கவுண்டரில் அதிகாரம் பண்ணப்பட்ட பட்டக்கார மயில் கவுண்டர் அவர்கள் கேட்டு யோசனை பண்ணுமிடத்தில் அந்த கவுண்டரவர்கள் இந்தப் பிள்ளையாண்டான்களை அழைத்து உங்கள்

ஏழாவது ஏடு

மாமனாகியவர் யாரென்று கேட்க ஈரோட்டிலே இருக்கிறவர் கள் என்று சொல்ல அந்த உமையாயி அந்தக் கவுண்டர் அவர் களையும் கூட்டி கொண்டு போய் ஈரோட்டில் இறங்கிக் கொண்டு அவர்களை அழைத்து இந்த விருத்தாத்தங்கள் எல்லாம் சொல்லி பெண் கொடுக்கும்படிக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் அப்படியே ஆகட்டுமென்று எங்கள் சாதித்தொழில் அறிந்திருந் தால் பெண் கொடுக்கிறோம் என்று சொல்லி இந்தப் பிள்ளையாண் டான்கள் வேலைசெய்கிறதும் குதிரை யானை சுவாமிகள் முதலா கிய வேலைகள் செய்வதையும் பார்த்து அவர்கள் கையினாலே கொங்களாயி அம்மனுக்கு வெகுவெகு உச்சிதமான உருவுகள் செய்வித்ததும் கண்டு சந்தோஷப்பட்டு கொண்டு உரிமைப் பெண் கொடுப்பதற்கு அவர்கள் வீட்டில் ஒருபெண் வெள்ளை நிறமாய்ப் பிறந்து இருந்தது அந்தப் பெண்ணை வெகுநாட்களாய் உறவின் முறையார் (திருமணம் செய்து) கொள்ளாமல் சும்மா இருந்தது. அந்தப் பெண்ணை கொடுக்கிறேம் என்று சம்மதப்பட்டதற்கு உமையாயும் மயில் கவுண்டர் அவர்களும் ஆலோசித்து உரிமை ஆனபடியினுலே நீங்கள் இந்த பெண்ணை கொடுத்தாலும் உரிமைக்காரன் கொள்ள வேண்டிய ஞாயம் சரி. அப்படியே கலியாணம் பண்ணிக் கொள்கிறோம் இந்த பெண்ணும் மாப்பிள் ளையும் பிழைக்கும் பொருட்டாய் நீங்கள் ஒரு சகாயம் பண்ண

வேண்டும். பெண்ணும் கொடுத்து ஊரும் கொடுத்து காணியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள் அப்படியே அனைவரும் சந்தோஷமாகி கலியாணம் நியமித்து உமையாயி மயில் கவுண்டர் அவர்களும் பத்துநாள் வரைக்குமிருந்து சகலமான செலவும் போட்டு பெண்வீட்டுக்காரன் சொன்னபடிக்கு செலவும் செய்து கலியாணம் முடித்து

## எட்டாவது ஏடு

கொண்டு பெண்ணையும் மாப்பிள்ளையையும் பல்லக்கின்மேல் ஏற்றிக் கொண்டு திருச்செங்கோட்டிற்கு வந்து வீதிமெரவினை செய்து சகலமான சனங்களும் அறிய கைலாசநாத சுவாமி சன்னதி முன்பாக இருந்துகொண்டு பெண்ணுக்கும் மாப்பிளைக்கும் சரிபாதி திருச்செங்கோடு குமரமங்கலம் திருமங்கலம் உஞ்சனை சித்தளந்தூர் சிறுமொலசி அனிமூர் ஆகிய ஏழு கிராமமும் ஊரும் காணியாய் கொடுத்து குடிவைத்து காணிக்கு தர்ம சாதனப் பட்டயமும் எழுதிக் கொடுத்து புத்திரகோத்திர பரியந்தம் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் நீங்கள் அனுபவித்துக் கொண்டு சிரஞ்சீவியாய் மகாராசராய் இருங்கள் என்று சொல்லிக் கொடுத்தார்கள். அந்தபட்டயத்தை வாங்கிக் கொண்டு இந்த பெண் மாப்பிள்ளை சொல்படி கேட்டு உமையாயி மயில் கவுண்டர் அவர்கள் கூடச் சொல்லி மாப்பிள்ளையுடைய மாமனார் மூன்று பேருக்கும் நாடும் பட்டமும் இருக்கப்பட்ட உறவின் முறை யாருக்கும் வெகுமதி சோமன் துப்பட்டியும் உறவின் முறை விருந்தும் நடத்துவித்து இந்த தருமமான கலியாணத்துக்கும் சாசனத்துக்கும் அர்த்தநாரீஸ்வர சுவாமி அறிய ஈரோட்டு கொங்களாயி அம்மன் அறிய கல்லும் காடும் பொருந்திய ஆகாச பூமி அறிய சந்திர சூரியர்கள் அறிய முப்பத்து முக்கோடி தேவர்கள் அறிய நாற்பது எண்ணாயிர ரிஷிகள் அறிய நவகோடி சித்தர் அறிய சத்தேழு கன்னிகள் அறிய அருந்ததி அறிய பஞ்சபாண்டவர்கள் அறிய துரோபதை அம்மன் அறிய மதுரை மீனாட்சி அறிய பவானி வேதநாயகி அம்மன் அறிய கூடுதுறை காசி கங்கை அறிய திருப்பதி வெங்கடாசலபதி அறிய தென்பழனி ஆண்டவர்

## ஒன்பதாவது ஏடு

அறிய சீரங்க நாதரறிய சிதம்பரம் சிவகாமி அம்மன் அறிய காஞ்சீபுரம் காமாட்சி அம்மன் அறிய பிரம்ம விஷ்ணு ருத்ர மும்மூர்த்திகள் அறிய திருநீல கண்ட சுவாமிகள் திருப்பாதம் அறிய

சத்தியமாய் நாங்கள் மூன்றுபேரும் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் மண்ணும் காணியாய் கொடுத்து ஊரும் கொடுத்து பெண்ணும் கொடுத்து காணிக்குச் சாதனப் பட்டயமும் எழுதிக் கொடுத்து இதை பரிபாலனம் பண்ணிக் கொண்டு புத்திர கோத்திர பரியந்தம் நீங்களே அனுபவித்துக் கொண்டு தீர்க்காயுசாய் நீடுழி காலம் சுகமாய் வாழ்ந்து இருக்க வேண்டியது. சுபம் இது மயில் கவுண்டன் கையெழுத்து.

சுபம்

இந்த சாசனத்தின் மூலமாகிய செப்பேட்டின் முதல் ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு. அடுத்த பக்கம் வரிகள் எட்டு இரண்டாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் என்பது அடுத்த பக்கம் வரிகள் எட்டு. மூன்றுவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் எட்டு. அடுத்தபக்கம் வரிகள் எட்டு நான்காவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் ஏழு அடுத்த பக்கம் வரிகள் ஏழு. ஐந்தாவது ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு அடுத்த பக்கம் வரிகள் எட்டு. ஆறாவது ஏட்டில் முதல்பக்கம் வரிகள் எட்டு, அடுத்த பக்கம் வரிகள் ஒன்பது. ஏழாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் ஒன்பது அடுத்த பக்கம் வரிகள் ஒன்பது. எட்டாவது ஏட்டில் முதல் பக்கம் வரிகள் எட்டு. அடுத்த பக்கம் வரிகள் ஒன்பது. ஒன்பதாவது ஏட்டில் வரிகள் எட்டு. அடுத்தபக்கம் எழுத்தில்லை. எனவே இதன் ஏடு ஒன்பது அவற்றின் பக்கம் பதினேழு. வரிகள் நூற்று நாற்பது.

பட்டயம் கொடுக்கப்பட்ட இடம்:—

நாககிரி சூழ்ந்த திருச்செங்கோட்டுத் தலமாகிய அர்த்த நாரீஸ்வரன் எழுந்தருளியுள்ள மலையின் கீழ் உள்ள பரிமளவல்லி கைலாச நாதர் குடிகொண்டுள்ள நிலத்தம்பிரான் சன்னதி முன் கொடுக்கப்பட்டது.

பட்டயம் கொடுக்கப்பட்ட காலம்:—

கலியுகாதி வருடம் 4503. பிலவ வருடத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்தின்படிக்கு இன்று கலியுகாதி வருடம் 5063 என்று அறியப்படுவதால், 560 வருடங்கள் நடந்துள்ளன. கி.பி1401 தமிழ் ஆனந்த வருடம் வைகாசி மாதம் 25 ந் தேதி வெள்ளிக் கிழமை, விசாக நட்சத்திரம், சஷ்டி திதியும் கூடிய சுபதினம்

பட்டயம் கொடுக்கப்பட்டதன் முறை:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேல்க்கரை பூந்துறை நாட்டைச் சேர்ந்த ஈரோட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட காளியண்ணன், செட்டியண்ணன், பெரியண்ணன் என்ற மூவரும் தங்கள் நாட்டைச்சேர்ந்த திருச்செங்கோடு, கொமரமங்கலம், உஞ்சனை, திருமங்கலம், சித்தலந்தூர், சிறுமொலசி, அனிமூர் ஆகிய ஏழு கிராமங்களும், அவைகளைச் சேர்ந்த ஊர்களும், மண்ணும். குடிவைத்தனர் என்பதனால் இடமும் ஆகியவைகளை அரைய நாட்டைச் சேர்ந்த கொடுமுடியிலிருந்து வந்து திருச்செங் கோட்டில் இருந்த வேலப்பன் மலையப்பன் என்ற தங்கள் மருமக்களுக்கும் திருமணக் காணியாகக் கொடுத்து பட்டயம் செய் துள்ளனர்.

பட்டயத்தில் குறிப்பிடப்பட்டவர்கள்:—

பொன் காளியப்பன்:—

இவர் வேலப்பன் மலையப்பன் என்பவர்களின் தகப்பனார். அரைய நாடாகிய கொடுமுடியைச் சேர்ந்தவர்

பெருங்காளியம்மாள்:—

பொன்காளியப்பனின் மனைவி. வேலப்பன் மலையப்பன் என்பவர்களின் தாயார்.

உமையாயி:—

அறைய நாட்டில் உள்ள கொடுமுடியைச் சேர்ந்தவள் உமையாயி, திருச்செங்கோட்டுத் தல சேவகம் பெற்று தேவரடியா ராக வாழ்ந்தவர். மோரூர் பட்டக்காரர் மயில்கவுண்டர் என்பவரின் காதல் மனையாள். வேலப்பன், மலையப்பன் ஆகிய அனாதை வேட் கோவப்பிள்ளைகளைக் காப்பாற்றி அவர்களுக்கு அவர் இனத்திலேயே திருமணம் செய்து வைத்த பரோபகாரி

மயில்கவுண்டர்:—

திருச்செங்கோட்டை அடுத்த மோரூர் கிராமத்தின் பட்டக் காரர். நாட்டுக் கவுண்டர். உமையாயி என்ற தேவரடியாரிடம் காதல் கொண்டவர். அவ்வம்மையாரின் வளர்ப்புப்பிள்ளைகளின் வகையை அறிந்து, அவர்களின் மாமன் வழியில் பெண்ணைத் திருமணம் செய்து வைத்து, அம்மாமன்மார்களின் உரிமை ஊர்

கிராமம், ஆகியவைகளைப் பெற்று வேலப்பன் மலையப்பன் ஆகியவர்களுக்கு உரிமையாக்கும் பட்டயம் செய்து கொடுத்த உத்தமர்.

## இராயர்களும் நாயக்கர்களும்

விஜயநகர அரசு கி. பி 1336ல் தோன்றியது. அது முதல் 250 ஆண்டுகள் இவ்வரசு நிலை பெற்றிருந்ததெனலாம். அக் காலங்களிலேயே இராயர்களும், நாயக்கர்களும் மிகச் சீரும் சிறப்புமாக நாட்டைப் போற்றி வந்தனர். நமது பட்டயத்தில் பல ராயர்களும், நாயக்கர்களும் கூறப்பட்டுள்ளனர். அவர்களில் பிரபுட தேவ மகாராயர், கிருஷ்ண தேவ மகாராயர், திருமலை நாயக்கர் என்பவர்கள், இவர்கள் ஆட்சிசெய்த காலத்தில் கொடுக்கப்பட்டது இப்பட்டயம் என்ற குறிப்பிற்கும், கலியுகாதி வருடம் 4503 என்பதற்கும், காலம் ஒன்றாய்க் காணப்படுவதால் 560 வருடங்களுக்குமுன் தோற்றியது இப்பட்டயம் என்பது விளங்கும்.

## பொதுக் குறிப்புகள்

பூந்துறை நாட்டவர் அறைய நாட்டவர்களுக்கு மாமன் முறை உறவுடையவர்கள். பட்டயத்தில் காளியண்ணன், செட்டியண்ணன்பெரியண்ணன் என்ற பெயர்கள் கூறப்பட்டாலும் காளியண்ணன் பெயர் முதலில் கூறப்படுவதால் இப்பட்டயத்தின்மூலவர், முதல்வர் என்றும் கூறலாம். இம் மூலவரை மேற்படி பெண் காளியக்காளின் தந்தையாகவும் கருத இடமுண்டு. மற்ற இருவரும் இவர்களின் சகோதரர்களாகவிருக்கலாம். இக்காளியண்ணன் என்பவர் தனது சகோதரர்களை வைத்துக் கொண்டு மருமகமணக் காணிப்பட்டயம் கொடுத்துள்ளனர்.

பட்டயம் பெற்றுக் கொண்டவர் வேலப்பன். தன் சகோதரன் மலையப்பனையும் அருகில் வைத்துக் கொண்டு தனது மாமனாரிடம் பட்டயம் பெற்றிருப்பார். ஏனென்றால் பட்டயம் பெற்றவர்களைப் பற்றியும் அனாதைச் சிறுவர்களைப் பற்றியம் கூறப்படும் இடங்களில் வேலப்பன் மலையப்பன் என்று முதலில் உரிமைப் பெண் காளியக்காளைத் திருமணம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

சில தொடர் விளக்கமும் பொருளும் :—

திருவாய் மலர்ந்தருளினபடிக்கு; உத்திரவிட்டபடி.
துளசி + கா + தலம்; துளசிகாதலம்; திருவரங்கம்.

யாடபானம், யாழ்பாணம்

ஈழம், சிங்களவர்கள் நாடு.

களம் + அத்து + தெவ் + அடுத்து; களத்தெவரடுத்து. போரில் பகைவர் முன் நின்று.

சமைய துரோகா கண்டன் — மததருமத்தைக் காப்பாற்றுபவன்.

சுகியிகுரதன் — நோயற்ற வாழ்வுடையவன்

வீட்டுச்சனம் — வீட்டில் உள்ள மக்கள்

வளவுச் சனம் — தெருவில் உள்ள மக்கள்

பிரமம் விஷ்ணு ருத்ரர்; ஆக்கல் அழித்தல் அளித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் மும்மூர்த்தி எனப் படுபவர்.

சேவகம் — தேவ காரிய உரிமை (யுடையவர்) களைப் பெற்றுச் செய்தல்

ருத்ரன் — சிவன்

அனுகிரகித்து — கிருபைசெய்து

சதுர்யுகம் — நான்கு ஊழிக்காலம் கிரேதா திரேதா துவாபர கலியுகம் என்பனவாகும்.

கிரி — மலை

மதி — அறிவு

பருவதம் — மலை

பரி — குதிரை

விப்பிரம் — விருப்பம் அல்லது மோகம்

சதி — கற்புடையாள்

குக்குடம் — கோழி

துவசம் — கொடி

சாலோகம் — கடவுளது உலகத்திருத்தல்

ரட்சகன் — காப்பாற்றுபவன்

இடபம் — எருது

காலாக்னி — ஊழிக் காலத் தீ

சுருதி — ஓலை

மேதினி — உலகம்

# தனி ஏடு

ஊமையாம் பட்டிக் கவிஞர் ந. கந்தசாமி அவர்களிடம் உள்ள ஒரு ஒற்றை ஓலை பின்கண்ட பாடலைத் தருகின்றது. குயவர் குடியின் ஈரோடு பட்டக்காரர் சின்னாஞ் செட்டியார் என்பவரின் வள்ளன்மையால் வெளியான பாடல். பாடியவர் யாரோ. பாடலின் கவிதைச் சுவையை நுகருங்கள். வரலாற்றுச் செய்தியென மயங்காதீர்.

கார் கொண்ட புவனமதில் கோல் குறை வேதியன்
    கரிகாலன் தனை வளர்த்தோன்
கற்பகக் குலால மாமுனிவ ரானவன்
    காஞ்சிக் கோயில் நாடவன்
சீர் கொண்ட கிரைததனில் வச்சிராச் சூரனைச்
    செயங் கொண்ட கும்பராசன்
திரேதா யுகந்தனில் திருமலையய்யங்கரைச்
    செயித்த திரு நீலகண்டர்
பார் கொண்ட துவாபரா தனில்க் கண்ட ராச்சதன்
    புவுசுதனை லென்று லோகப்
பரிவுள்ள மண்ணுடைய ராசேந்திர னெனயிந்தப்
    பண்புள்ள கலியுகத்தில்
பேர் கொண்ட பட்டி விக்கிரமாதித்தனைச் செயம்
    பெற்ற சாலிய வாகனன்
பெருமை பனை நகரில் வளர் ஈரோடு பட்டம்
    பெற்ற சின்னாஞ் செட்டியே.

---

குறிப்பு: இந்தச் சின்னாஞ் செட்டியார் சுமார் மூன்று தலை முறைக்கு முன்னர் ஈரோடு பட்டக்காரராக இருந்தவராக இருக்கலாம்.

# திருநீலகண்டர் பள்ளு

## அறிமுகம்

### 1. திருநீலகண்டர்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன், திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன் என்று வருகின்ற திருத்தொண்டர் தொகையில், முதல் முதலாகப் பெயர் சுட்டப்படும் அடியவர் திருநீலகண்டர் ஆவர். பெண்மை நலம் துய்த்தலே பெரும் பேறென்று விளங்கிய காலத்தில், தனது மனைவிக்குச் செய்து கொடுத்த ஆணைக்காக, இளமையைத் தனித்தே கழித்த பெருமை கருதியே, அறுபத்துநால்வரிலும் முதல்வராக எண்ணுப்படுகிறார். அவரது வரலாற்றை எளிய சந்தத்தில் 16 பாடல்களில் தருவதே இந்நூல். பள்ளீரே என்று இறுதியில் விளக்கப்படுவதால் பள்ளு எனப்படலாயிற்று.

### 2. ஆசிரியர்

இந்நூலினைப் பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஊமையாம் பட்டிக் கவிஞர் கந்தசாமி அவர்களால் ஓலைச் சுவடி கண்டுபிடிக்கப்பட்டு, பிரதி செய்து தரப்பட்டது. கவிஞர் கந்தசாமி அவர்கள் ஏற்கனவே பல நூல்களைப் பதிப்பித்துள்ளார்கள் அவற்றுள் "திருச்செங்கோட்டுப் பள்ளு" என்ற நூல் முதன்மையானது.

—கொடுமுடி

### திருநீலகண்டர் பள்ளு

*தில்லைச்சிதம்பரம் தன்னிலொருநாள்*
*திருநடம்ஆடும் சிவனுடனே*
*தேவிசிவகாமி நாயகியந்தத்*
*திருநீலகண்டன் நெறியுரைக்க*
*சொல்லச்செவிதனில் கேட்டரனாரும்*
*சோதித்தவனை நான்சூதாக்கிச்*
*சொன்னமொழி தவறுமலேநாளைக்குச்*
*சுகத்துடன்வாழ நினைத்திடுவேன்*
*கல்லைப்பிசைந்து பெருநாருரித்துக்*
*கையால்திரித்துக் கயிருக்கிக்*
*காண்டிபம்தன்னில் குதைபூட்டினாலும்*
*கருத்தையவரைப் பிரிக்குமாதோ*
*அல்லல்பணியை அழகாகப்பூண்டவர்*
*அம்பலவாணர் மிகக்கடிந்து*
*அங்கங்கைகேட்க உபயங்கள்பண்ணி*
*அறியவேணு மென்றார்பள்ளீரே.*

கங்கணச்சேர்வையும் விபூதிக்கோர்வையும்
காலில்சதங்கையும் மான்மழுவும்
காலகண்டர்திரு மேனியும்காவடி
தங்கப்பிரகாசத் திங்களும்கங்கையும்
தாபிதச்செஞ்சடை மீதழகும்
காதிலேவெண்குழை குண்டலமும்
தற்பரமான சதாசிவசங்கரர்
தன்கையில்சங்கு சேகண்டிகொண்டு
குங்குமம்வெண்ணைத் திருநீற்றுப்பூச்சுடன்
சூரியசூலமும் மாத்திரையும்
செங்கதிரோனைத் திருவோடதாக்கியே
செம்பொன் இழைப் பட்டுமேற்பூண்டு
செவ்வந்திமாலை இருபுயமாடச்
சிவன் வரலானார் பள்ளீரே.

மெய்ப்புள்ளபத்தன் திருநீலகண்டனை
மெய்யுள்ளமாதை நினைவறிய
வேடமும்சங்கம ரூபமதாகவே
விபூதிக்கோர்வையும் தூளிதமும்
கற்பனைபண்ணத் தெருவீதிவந்து
சந்தோஷமாக மனை புகுந்து
சந்தமொலித்திட சேகண்டிகொட்டி
சதாசிவசங்கர செய்செய்என
கற்புடைமாது பரிவுடனேகண்டு
கண்களிகூர்ந்துமே தெண்டனிட்டு
கர்த்தனேசித்தனே அத்தனேஎங்கள்
கருவூலமேஇங்கு வாருமென்று
அற்புதமாக ஒருபிடிஅன்னம்
அன்புடன்நீரமு துண்டதானல்
ஐயர்பழனபுரி முருகேசர்
அருள்பெறுவோ மென்ருர்பள்ளீரே.

முற்றம்விளக்கினள் பன்னீர்தெளித்தனள்
முக்கண்ணர்க்கன்பான பூசைசெய்ய
முப்பத்திரண்டு கறிவகைநெய்பால்
முற்றிலும்அங்கே அடிசிலிட
சற்றேசிவபூசை பண்ணிக்கொண்டேயிப்போ
சந்தோஷமாகவே நான்வருவேன்
சம்மதிச்சேதிரு வோடைஇருவோரும்
கற்பனைபண்ணாமல் வைத்திரென்ருர்.

பத்திரமாகவே கப்பறையிதொரு
பாரங்களென்றுநீ பாராமல்
பத்தாதகாரியந் தானொருநேரத்தில்
பாரம்பட்சம தாகிவிடும்
குத்தமேவாரு தடியேனிட்த்திலே
கோரணிபாரணி பண்ணதே
கொப்பென இப்போ அமுதுகொள்ளுமென்று
கூறிவிட்டாரடி பள்ளீரே.

ஐயர்நடந்துமே கோவிலில்செல்ல
அடைக்கலம்வைத்த மடக்கெழும்பி
அந்தரச்சாலையில் வந்துபுகுந்து
ஆகாயவானில் எழுந்ததற்பின்
பொய்யுரையானைத் திருநீலகண்டனை
போதவேயிப்ப நினைவறியப்
போயித்திருமா தினமையை மாற்றிப்
பிரியாவிடையாக வைப்பமென்று
பையப்பையசற்றே நேரப்படப்பட
பாசாங்கும்ஆசார கோசரமும்
பண்புடனேவந்து பத்தனெங்கேஎன்று
பண்ணையும்கீழகம் பாடிக்கொண்டார்
மெய்யானகற்புடை மாலை திருவோட்டை
வெய்த்தஇடந்தனில் காணாமல்
வேதனைகொண்டு மனங்கலங்கியவள்
வெட்கிநின்றாரடி பள்ளீரே.

செல்லுமோயின்ன மிரண்டொருநாழிகை
சேதிகளுமென்ன தாமசமோ
செப்பும்திருநீல பத்தாநமக்கினி
செணந்தரித்திட நேரமில்லை
அல்லவென்றால்சொல்லும் மேலத்தெருவில் ஓர்
அன்புள்ளபத்தன் அமுதுசொன்னான்
அதுக்கண்டை வீட்டுப்பத்தனொருவன்
அமுதிருக்குது வாருமென்றான்
பொல்லாதகாளி அகோரிஎன்பாரி
பிரிந்தரைநாழி யிருந்தறியாள்
பிள்ளைகள்ரண்டு அதிலொருபிள்ளை
போவார்வருவாரைப் பார்த்திருக்கும்
தொல்லைகிடக்கு தனேகம்நமக்கினி
தோதகம்பாதகம் பண்ணாதே !
தோகையழைத்தமு துண்டில்லையென்று
சொல்லிவிடுமென்றார் பள்ளீரே.

பஞ்சைமொழிகள் மொழிந்துதிருநீல
பத்தன்சிவனடி தான்பணிந்து
பத்திரமாகவே கப்பறைவைப்பிடம்
பார்த்தெடுத்துவரப் போனாளையா
அஞ்சல்அஞ்சல்என்று கைகட்டிவாய்பொத்தி
அப்பனேசற்றே பொறுத்திடென்றார்
ஆறுதலைசொல்லி வீறிநடந்து
அவனும்ஓரண்டையில் தேடலுற்றான்
தஞ்சமீதையா ஏதோதிருவுளம்
தான்வைத்தபாத்திரங் காணோம்என்றான்
தப்புரைக்காரா அப்போதேசொன்னேன்
தட்டோடுபண்ணுவாய் நீயுமென்று
குஞ்சிநகைத்தே மிகச்சீறிக்
கோபங்கள்கண்கள் நெருப்பெரிய
கொப்பெனநம்மிட கப்பறைகையில்
கொடுத்துவிடுமென்றார் பள்ளீரே.

பங்கப்படப்படக் கொள்ளாதகோபங்கள்
பண்ணியிவர்கள் மனம்பார்க்க
பத்தன்நிலை வழுவாமலேநின்று
பாருமின்னேரம் என்மீதிலென்று
தங்கத்தினாலே இழைத்தொருபாத்திரம்
தரேன்உமக்கு மனங்குளிர—எனத்
தாரத்தைவிற்று வெள்ளாட்டியைக்கொள்ளத்
தகுமோஉமக்கிது சொல்லுமென்றார்
தொங்கத்தனம்பண்ணித் தந்துகள்பேசியே
தோறுவழக்குக் கடியுமிட்டு
தோற்பதுகொண்டு சபைமெச்சஎன்னைத்
துரத்திவிடவோ நினைக்கிறாய்நீ
மங்கைப்பெண்ணாருந்தன் தேவியும் நீயும்
வயதுபதிறாய் வாழ்ந்திருப்பீர்
வண்மையுடன்திரு வோட்டைஎடுத்தோடி
வாருமென்றா ரடிபள்ளீரே.

தெள்ளியபத்தன் திருநீலகண்டனைத்
தேசிகனாரன்று வாதைபண்ண
தேரடியில்பிள்ளை காணாததாய்போல்
தியங்கிமயங்கித் திகைத்ததன் பின்
வெள்ளிமலைக்குள் இருக்கும்அரனை
வேதவிமல பராபரனை
வேண்டிக்கொண்டய்யர் காலில்பணிந்து
மெய்யானபத்தனும் சொல்லல்உற்றான்

அள்ளித்தருகிறேன் செம்பொன் உமக்கு
அய்யனே எங்கள் குலதெய்வமே
ஆறுதப்புச்சிலை நூறுகுற்றம்பிழை
அடியேனைப்பற்றிப் பொறுத்திடென்றான்
துள்ளியெழுந்தவர் கோவித்துக்கொண்டு
தோஷமோ முன்செய்த பாவமிதோ
துர்ச்சனர்வீட்டுக்கு வந்துதிருவோடு
தோற்றமென்றாரடி பள்ளீரே.

கள்ளமில்லாததிருநீலக் கண்டகனக்
கர்த்தன்தயவு மிகவறிந்து
காசினியிலிப்படி யன்புள்ளபத்தருங்
கற்புள்ளமாதருங் காணரிது
உள்ளந்தனிலே நினைந்துஅரனாரும்
உற்றமனந்தன்னில் மெத்தவெண்ணி
ஒருநிலையாகிய பத்தங்குலைக்க
உபாயங்கள்தேடி நினைக்குகிறார்
தெள்ளும்பழனா புரியிலதினம்
தெரிசினையாகவே தானிருக்கும்
தேவாதிதேவர் முருகேசரிருக்கும்
தேரோடும்வீதிக்கும் மேல்புறமாய்
நல்லயிருள்தனில் பரவைதன்வீட்டுக்கு
நாணமில்லாமலே தூதுசென்றார்
நம்பிக்கைசொல்ல நாமெய்யென்றிருக்கவும்
நடவுமென்று ரடிபள்ளீரே.

அந்தப்படியே இரு வோருமுமக்கு
ஆணைப்படிவாதம் பண்ணுகிறோம்
அன்னஞ்சமைத்து வெகுநேரமாச்சுது
அய்யனே நீரதைக் கொள்ளுமென்றார்
குந்தியிருக்கயிடஞ் சற்றுமில்லானைக்
கோட்டையிட்டுக் கட்டிக்கொள்ளுமென்றாய்
கோபம்வருதென்ன கூத்தாயிருக்குது
குத்திரவார்த்தைகள் பேசாதே
தந்திரக்காரா உபாயங்கள்பண்ணிச்
சங்கமரோட்டைப் பறித்துக்கொண்டாய்
தையல்உமைபாகர் அம்பலவாணர்
தான்கொடுப்பார் உமக்குக்கூலி
சுந்தரஞ்சேர் பழனாபுரியில்வாழும்
சுப்பிரமண்ணியர்க் கொப்பாக
சூதுகள்வாதுகள் பண்ணாதிருவரும்
சும்மாநடஎன்றார் பள்ளீரே.

நடவென்றார்ஐயா திருநீலகண்டன்
நாரியுங்கூட எழுந்திருந்து
நமச்சிவாயம்என்றஞ் செழுத்தேறியே
நன்றாய்த்தலைவாயில் கடந்ததன்பின்
திடீரெனவிழுந்தான் திருநீலகண்டனும்
தேவியும்கண்டு மனங்கலங்கி
சிவந்திருகண் கலங்கியேமாதுக்கு
சேர்ந்திருகால் தடுமாறி
தடதடவென்னவே அவளும்விழுந்தாள்
தாரார்செஞ்சடை மீதழகர்
தப்புரைக்காரா சற்றாகிலும்உந்தன்
தாரமீதென்று யிரங்காதோ
விடமணிந்தவர் கடலணிந்தவர்
மிகநடந்தவர் தொடர்ந்துபோய்
மெள்ளயிளமை நயினார்குளக்கரை
மேடேறினாரடி பள்ளீரே.

நரைத்தகூந்தலில் கொப்பியாமிவள்
நாதன்மனத்துக் கொப்பியாம்
நல்லோர்தமக்கு அம்பியாமிவள்
நாலாம்பதத்தை நம்பியாம்
உரைத்தசெம்பொன்னு மேனியாமிவள்
உற்றுவளர்ந்த தேனியாம்
உண்மைப்பழம்பொருள் தியானியாம்இவள்
ஓதுமஞ்செழுத்து ஞானியாம்
திரைத்தபஞ்சிலும் மெல்லியாம்இவள்
தேனமுர்தக்கலைச் சொல்லியாம்
தில்லைச்சிதம்பர மேவியாம்இவள்
திருநீலபத்தன் தேவியாம்
நிரைத்தசண்பக மாலையாம்இவள்
நின்றுவளர்ந்தபூஞ் சோலையாம்
நேமநெறிதவறாத இவரை
நிண்ணயம்பண்ணென்றார் பள்ளீரே.

நம்பும்திருநீல பத்தனைச்சோதித்து
நாதன்மனங்கள் களிகூர
நல்லயிளமை நயினார் குளக்கரை
நம்பிக்கைபண்ணும் வகைகேளும்
கும்பிட்டிருவரும் கைதனைக்கோர்த்து
கூசாமல்ஒருடை தானுகுந்து
குற்றமேஎன்மீதில் சற்றில்லையென்று
குளத்தினில்மூழ்கி யுரைத்திடென்றார்

அம்பிட்டநேர்விழி யாள்சிவகாமி
ஆண்டவர்வந்து மொழிந்தாலும்
அந்தப்படிமனம் ஒவ்வாதுநீரிங்கே
ஆயிரம்சொன்னாலும் ஆகாது
செம்பொற்சிலம்புகள் கலகலஎன்னவே
சேவுமீதேறும் வடிவழகர்
தில்லையம்பல வாணர்பதமதில்
சேர்வமென்ருரடி பள்ளீரே.


அண்டாதகோபம் வருகுதுபாரினி
ஆளறியாமல் மிரட்டுகிருய்
ஆண்டியோட்டுக்கு சந்ததியில்லைஎன்று
அடைக்கலம்வைத்த பொருள்பறித்தாய்
வண்டத்திருநீல கண்டாசம்மதி
வாக்கில்பந்தய மாடுகிருய்
வண்மையுடன்நான் மெய்என்றிருக்கவும்
மாளாவழக்குகள் பண்ணுகிருய்
தீண்டாதேபோனலும் போறீரிந்தத்
தெண்டாயுதத்தை முனைபிடித்து
தில்லையம்பல வாணரை நோக்கித்
திருக்குளத்திலே மூழ்குமென்ருர்
தண்டாவுமாலை மந்திரக்கூரையும்
தாலியுமகொன்றையும் பூவுடனே
தம்பிரான்வெள்ளை விடைமீதிலேநின்று
தான்காட்சிதந்தார் பள்ளீரே.

அப்பத்திருநீல கண்டன்மனைவியும்
ஆதிசிவனடி தாள்பணிந்து
அய்யனேவெள்ளை விடைமீதினில்காட்சி
அருள்திருப்பதம் சேருமென்ருள்
இப்புவிதன்னில் புருஷனும்நீயுமாய்
என்றும்தீண்டா திருந்ததனல்
இன்னும்சிலநாள் இளமையில்வாழ்ந்து
இருந்துகைலையில் நீர்வருவீர்
அப்பஉமக்கு அறுபத்துமூவரில்
ஆனபரகதி யானளிப்பேன்
அன்றியிருவர் நிலையை அறிந்திட
ஆண்டியாய் இப்போது யானும்வந்தேன்
செப்பும்சிவகாமி தன்னுடன் அந்தத்
தில்லைச்சிதம்பர வாணருமே
சேவுமேலேறிக் கைலைசென்று
சிறந்திருந்திருந்தாரடி பள்ளீரே.

(திருநீலகண்டன்பள்ளு முற்றிற்று)

ஒலைச்சுவடியின்பிரதி

OFFICE OF THE CURATOR
RECEIVED
25 அக் 1977
GOVT. ORIENTAL MANUSCRIPTS



**For Quality Retreading of**
**all Sizes of Tyres from**
SCOOTERS TO TRACTOR
**in our plant by highly skilled persons**
**Please Contact**

# THE ANAMALLAIS RETREADING COMPANY

225, Dr. Nanjappa Road,
COIMBATORE-641018
PHONE: 34500

BRANCH : TIRUNELVELI-627002
PHONE: 2590

*ARC Symbol of SERVICE! SAFETY!! SAVINGS!!!*

ஆசிரியர், வெளியிடுபவர்: கொடுமுடி சண்முகப் பிரகதம் 26, இந்திரா நகர், சென்னை-600020. அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.